செய்தி வெளியீடு எண் : 1009 நாள்: 30.01.2023

# செய்தி வெளியீடு

## ஆவின் தின கொண்டாட்டம் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தகவல்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) உருவாக்கப்பட்ட நாளான 01.02.1981 தினத்தையொட்டி பிப்ரவரி 1–ஆம் தேதியை "ஆவின் தினமாக" கொண்டாடும் விதமாக பிப்ரவரி மாதம் முழுவதும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) உருவாக்கப்பட்ட நாளான 01.02.1981 தினத்தையொட்டி ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 1–ஆம் தேதியை ஆவின் தினமாக கொண்டாடப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் 1958–ம் ஆண்டு பால்வளத்துறை என்று தனி அரசுத் துறை துவக்கப்பட்டது. கூட்டுறவுத் துறையில் இருந்து வந்த அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் மீதான சட்டப் பூர்வ மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள், 01.08.1965 அன்று பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டது. பின்னர், 1972 ஆம் ஆண்டில் இத்துறையின் வணிக நடவடிக்கைகள் அனைத்தும், கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன.

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு அரசாணையின் படி செயல்படுத்தப்பட்டபோது, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உருவாக்கப்பட்டு 01.02.1981 அன்று துவங்கப்பட்டு அதற்குமுன் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டன.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை இணைக்கும் விதமாக ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 1–ஆம் தேதி "ஆவின் தினமாக" கொண்டாடப்படுவதை தொடர்ந்து, பிப்ரவரி மாதம் முழுவதும் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. நுகர்வோர்களுக்கு சமையல் போட்டி, பால் உற்பத்தியாளர்களின் குடும்பத்தினருக்கு பல்வேறு போட்டிகள், ஆவின் சமூகவலைத்தளங்களில் ஆவின் பால் மற்றும் பால் உபப்பொருட்கள் சம்பந்தமான ஓவியம் / விளம்பரம் வடிவமைத்தல் / குறும்படம் போன்ற போட்டிகள் நடத்தி அதில் வெற்றியாளர்கள் / சிறந்த பதிவாளர்களை தேர்வு செய்து பரிசுகள் வழங்குதல், அதிகளவில் தொடர்ந்து பால் உபப்பொருட்களை வாங்கும் சிறந்த சில்லறை விற்பனையாளர்கள் / மொத்த விற்பனையாளர்களையும் மற்றும் விற்பனை இலக்கை எய்திய சிறந்த பாலகங்களையும் தேர்வு செய்து கௌரவப்படுத்தி நற்சான்று வழங்குதல், கால்நடை மருத்துவம் மற்றும் தடுப்பூசி முகாம் அமைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. இதில் நுகர்வோர்கள் கலந்து கொண்டு 'ஆவின்'–உடன் இணைந்து கொண்டாட்டத்தில் பங்கெடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த பிப்ரவரி மாதம் முழுவதும் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாத இறுதியில் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படும்.

# <u>ஆவின் தின கொண்டாட்ட நிகழ்வுகள்</u>

பிப்ரவரி மாதம் 01.02.2023 அன்று ஆவின் தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட இருக்கிறது. இதனை ஒட்டி ஆவின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிகள் பிப்ரவரி மாதம் முழுவதும் நடத்தப்படும்.

இதில் சமையல் போட்டி, ஆவின் நிறுவனம் பற்றி இரண்டு நிமிட குறும்பட விளம்பர போட்டி மற்றும் ஆவின் நிறுவனம் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் போஸ்டர்கள் தயாரிக்கும் போட்டி நடைபெறும்.

ஆவின் நிறுவனத்தின் பன்னீர் மற்றும் ஐஸ்கிரீம் வகைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.

**I. ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் போட்டிகள்:**

- சமையல் போட்டி
- விளையாட்டு போட்டி
    - சிறுவர்களுக்கான போட்டி: ஆவின் தொடர்பான ஓவியம் வரைதல், ரன்னிங் ரேஸ், வெல்த் அவுட் ஆப் வேஸ்ட் (பழைய ஆவின் காலி பாக்கெட்டுகள், அட்டை பெட்டிகள் போன்றவற்றை பயன்படுத்தி உபயோகமான பொருட்கள் செய்தல்) மற்றும் கிளே மோல்டிங்.
    - பெரியவர்களுக்கான போட்டி : சமையல் போட்டி, கோலப்போட்டி, ஸ்லொ சைக்ளிங், மற்றும் கேரம் / செஸ் போன்ற போட்டிகள்.
- போஸ்டர் டிசைன்
- குறும் படம்

**II. ஆவின் நிறுவனத்திற்கு கடந்த ஆண்டுகளில் சிறந்த பங்கேற்பு வழங்கிய ஊழியர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு பரிசுகள் வழங்குதல்:**

1) சிறந்த மொத்த விற்பனையாளர் – பால்
2) சிறந்த மொத்த விற்பனையாளர் – பால் உபபொருட்கள்
3) சிறந்த சில்லறை விற்பனையாளர்
4) சிறந்த துணை மேலாளர் (விற்பனை)
5) சிறந்த விற்பனை உதவியாளர்

**III. பன்னீர் விற்பனையை ஊக்குவிக்க விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்:**

1. 25 பன்னீர் (200 கிராம்) பாக்கெட்டுகளுக்கு மேல் வாங்கும் சில்லறை விற்பனையாளர்களுக்கு 1 பன்னீர் பாக்கெட் இலவசமாக வழங்கப்படும்.

2. 250 பன்னீர் (200 கிராம்) பாக்கெட்டுகள் வாங்கும் மொத்த விற்பனையாளர்களுக்கு 10 பன்னீர் பாக்கெட்டுகள் இலவசமாக வழங்கப்படும்.

**IV. ஆவின் நுகர்வோர்களுக்குக்கான சிறப்பு சலுகைகள்:**

1. ரூபாய் 250/- மேல் ஐஸ் கிரீம் வாங்கும் நுகர்வோருக்கு ரூபாய் 10 பெறுமானமுள்ள ஐஸ் கிரீம் இலவசமாக வழங்கப்படும்.

2. ரூபாய் 500/- மேல் ஐஸ் கிரீம் வாங்கும் நுகர்வோருக்கு ரூபாய் 20 பெறுமானமுள்ள ஐஸ் கிரீம் இலவசமாக வழங்கப்படும்.

இந்த ஆவின் தின கொண்டாட்டத்தில் ஆவின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆவின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

AavinTN AavinTN AavinTN